Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 22

திங்கட்கிழமை 10 ஜூலை 2023

ஆனி 25 ஆம் நாள் – வ 2054



## நீதிபதிகளை விமர்சிக்க எவருக்கும் உரிமையில்லை

### நீதியமைச்சர் விஜயதாஸ காட்டம்

கொழும்பு, ஜூலை 10
நீதிமன்றத்தையோ நீதிபதிகளையோ விமர்சிக்க எவருக்கும் உரிமையில்லை. நாட்டின் ஜனாதிபதி கூட நீதிமன்றத்துக்குத் தலைவணங்கத்தான் வேண்டும் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர »11

## முடிந்தால் நாடாளுமன்றில் கண்டனம் தெரிவியுங்கள்!!!

### தமிழ் எம்.பி.க்களுக்கு வீரசேகர சவால்

கொழும்பு, ஜூலை 10
நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் முடிந்தால் நாடாளுமன்றில் என்னைக் கண்டிக்கட்டும். நான் அவர்களுக்கு அங்கு உரிய பதிலடி கொடுப்பேன் - இவ்வாறு தெரிவித்துள்ளார் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளு »11



## சமஷ்டித் தீர்வையே வலியுறுத்தவேண்டும்

### இந்தியாவுக்கு கடிதம் எழுதுகிறது முன்னணி

**யாழ்ப்பாணம், ஜூலை 10**
**தமிழர் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வையே இந்தியா வலியுறுத்தவேண்டும் என கோருகின்ற கடிதமொன்றை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதுவரிடம் கையளிக்கவுள்ளது.** »11

## தொல்லியல் சின்னங்களை மீளவும் ஒப்படையுங்கள்

### ஓராண்டின் பின்னர் கோரிய ஜனாதிபதியின் செயலர்

கொழும்பு, ஜூலை 10
இலங்கையின் முன்னாள் ஆளுநர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் உத்தியோகபூர்வ சின்னங்கள் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்கள் எவரிடத்திலேனும் இருக்குமாயின் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பாக »11

நவாலிப் படுகொலை

## சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் உணர்பூர்வ நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 10
நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் சிறிலங்கா வான்படையால் புக்காரா விமானம் மூலம் குண்டு வீசிப் படுகொலை செய்யப்பட்ட 147 உறவுகளுக்குமான நினைவேந்தல் தேவாலயத்தில் நேற்று மாலை 5 மணிக்கு இடம்பெற்றது. »11

## மழைக்கு மீண்டும் வாய்ப்பு

யாழ்., ஜூலை 10
மேற்காவுகைச்செயன்முறையின் காரணமாக இன்று முதல் எதிர்வரும் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளுக்கு பி.ப. 2 மணிக்கு பின்னர் அல்லது காலை 9 மணிக்கு »11

## அசுர வேக யாழ்.தேவி வெள்ளோட்டம் நேற்று

(விரிவு - பக்:7)

பொலநறுவையில்

## பேருந்து கவிழ்ந்து 10 பேர் உயிரிழப்பு

### எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அச்சம்

கொழும்பு, ஜூலை 10
அக்கரைப்பற்று நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்று பொலநறுவை மாவட்டத்தின் மன்னம்பிட்டிய பகுதியில் உள்ள கொட்டாளி பாலத்தில் நேற்றிரவு 7.30 மணியளவில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பலர் »11

## அதிபர் தெரிவு முடிந்த பின்னர் மீண்டும் விண்ணப்பம் கோரல்

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 10
வேலணை மத்திய கல்லூரியில் ஏற்பட்ட அதிபர் வெற்றிடத்துக்கு விண்ணப்பம் கோரப்பட்டு அதிபர் தெரிவு முடிவடைந்த பின்னர் மீளவும் அதிபர் தெரிவுக்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் »11




மேலதிக செயலர்கள் இடமாற்றம்

## முரளிதரன் கிளிநொச்சிக்கு சிறிமோகனன் யாழுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 10
யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மேலதிக மாவட்டச் செயலராகப் பணியாற்றிய சு.முரளிதரன் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார். கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மேலதிக மாவட்டச் »11

## வாகனத்தை தாடியால் இழுத்துச் சாதனை!

யாழ்ப்பாணம், ஜூலை 10
ஆயிரத்து 550 கிலோ எடை கொண்ட ஊர்தியை 59 வயதுடைய செல்லையா திருச்செல்வம் »11


## ரிக்ரொக் காதல் இளம்பெண் சாவு!

யாழ்ப்பாணம், ஜூலை 10
ரிக்ரொக் செயலி ஊடாக தென்னிலங்கையைச் சேர்ந்தஇளைஞனை பதிவுத் திருமணம் செய்த 19 வயதான இளம்பெண் நேற்று தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார். »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கையில் பயன்படுத்தப்பட்டதைப் போன்று

# உக்ரைனுக்குக் கொத்துக்குண்டு அமெரிக்கா பகிரங்க அறிவிப்பு



## போர்க்குற்றம் என்று நேசநாடுகளே கொதிப்பு

**கொழும்பு, ஜூலை 10**

**இலங்கையில் இறுதிப்போரின்போது சர்வதேசப் போரியல் விதிமுறைகளுக்கு முரணாகக் கொத்துக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டன என்ற குற்றச்சாட்டுகள் இன்றளவும் பேசுபொருளாக உள்ள நிலையில், ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்காகக் கொத்துக்குண்டுகளை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.**

அமெரிக்காவின் இந்த முடிவு போர்க் குற்றம் என்பதுடன், இதை அனுமதிக்கமுடியாது என்று நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, பிரிட்டன் உள்ளிட்ட அமெரிக்காவுக்கு நெருக்கமான நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வருகின்றது. இந்தப் போரில் ரஷ்யாவுக்குக் கடும் அழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களை உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கிவந்தது. எனினும், அமெரிக்கா நினைத்த இலக்கை இன்னமும் அடைந்து கொள்ள முடியவில்லை. இந்த நிலையிலேயே 'கொத்துக்குண்டுகளை' உக்ரைனுக்கு வழங்க தற்போது அமெரிக்கா முன்வந்துள்ளது. இந்தத் தீர்மானத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி பைடன் ஒப்புதல் வழங்கியுள்ளார். 'இது ஒரு கடினமான முடிவு' என்று அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய - உக்ரைன் எல்லையில் வாழும் மக்கள் ரஷ்ய மொழி பேசுபவர்களாகவும், ரஷ்ய ஆதரவாளர்களாகவும் உள்ளனர். இவர்களை உக்ரைன் காலாகாலமாக வஞ்சித்தே வந்துள்ளது.

எனவே அந்தப் பகுதியில் இந்தக் கொத்துக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டால் அது பொதுமக்களுக்குப் பேரழிவை ஏற்படுத்தும் என்று போரியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

கொத்துக்குண்டுகள் பாரதூரமானவை, அது பயன்படுத்தப்படக் கூடாது என்ற பிரிட்டனின் முடிவில் மாற்றமில்லை என்று பிரிட்டன் அறிவித்துள்ளது.

அதுபோன்று 'அமெரிக்காவின் முடிவு போர்க்குற்றம்' என்று நியூஸிலாந்து வெளிப்படையாக விமர்சித்துள்ளது.

இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரின்போது இலங்கைப் படையினரால் கொத்துக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டன என்றும் அவற்றை அமெரிக்காவே வழங்கியதும் என்ற குற்றச்சாட்டுகள் நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



## போராளிகள் நலன்புரிச் சங்க அலுவலகம் வவு.வில் திறப்பு

வவுனியா, ஜூலை 10

போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் முதலாவது அலுவலகம் வவுனியா ஆலடி வீதி, தோணிக்கல் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

முன்னாள் போராளி செ.அரவிந்தன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் அலுவலகத்தின் பெயர்ப் பலகையை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் திரை நீக்கம் செய்துவைத்தார். தொடர்ந்து அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவநாதன் கிஷோர், மூத்த கலைஞர் தமிழ்மணி மேழிக்குமரன், சமூகச் செயற்பாட்டாளர்கள், முன்னாள் போராளிகள் எனப் பலர் நிகழ்வில் பங்கேற்றனர். (ச-18)

### முல்லை மாவட்டச் செயலராக

## உமாமகேஸ்வரன் கடமையேற்பு

முல்லைத்தீவு, ஜூலை 10

முல்லைத்தீவு மாவட்டச் செயலாளராக அ.உமாமகேஸ்வரன் நேற்று ஞாயிற்றுக்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலராக கடமையாற்றிய க.விமலநாதன் ஓய்வுபெற்றுச் சென்றமையால் நிலவிய வெற்றிடத்துக்கு, வடக்கு மாகாணசபையின் கல்வி அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய அருளாந்தும் உமாமகேஸ்வரன் நியமிக்கப்பட்டார்.

இந்தநிலையில் நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் அவர் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார். (ச)

### சோளம் இறக்குமதி

## முட்டை, கோழி இறைச்சி விலைகள் குறையும்



கொழும்பு, ஜூலை 10


முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலைகள் எதிர்வரும் இரண்டு மாதங்களில் குறைவடையும் என கால்நடை வள இராஜாங்க அமைச்சர் டீ.பி.ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அன்றாடத் தேவைக்காக 80 ஆயிரம் முட்டைகளை உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியாத நிலையில் முட்டையை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. தற்போது அரசாங்கம் 2 இலட்சம் மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்துள்ளது. எனவே எதிர்காலத்தில் கால்நடை தீவனத்துக்குத் தட்டுப்பாடு ஏற்படாது.

சோளம் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபா வீதம் மானியம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எனவே, எதிர்வரும் வாரங்களில் முட்டை மற்றும் கோழியிறைச்சியின் விலை குறைவடையும் - என்றார். (ச-இ)

# நீதிபதி மீதான விமர்சனம் மட்டமான கோழைத்தனம்!





யாழ்ப்பாணம், ஜூலை 10

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் நடவடிக்கைகளை விமர்சித்து- மிக மோசமான இனவாதக் கருத்துக்களை கக்கி- தனது சிறப்புரிமை என்கின்ற குண்டுதுளைக்காத கவசத்தை அணிந்து நாடாளுமன்றில் பலம் காட்டியுள்ளார் சரத் வீரசேகர. இது மட்டமான கோழைத்தனமாகும் என்று சிரேஷ்ட சட்டத்தரணியும் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவருமான என்.சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-


குருந்தூர்மலை ஆலய விவகார வழக்கு முல்லைத்தீவு நீதிமன்றத்தில் தொடரும் நிலையில் அந்த வழக்குத் தொடர்பான விடயங்களைப் பிரஸ்தாபித்து நீதிபதியின் நடவடிக்கைகளை நாடாளுமன்றில் விமர்சித்துள்ளார். ஒரு நீதிபதியின் கடமைவழி நடவடிக்கைகளைப் பிரஸ்தாபித்து விவாதிப்பதானால் அதற்கென தனியான ஒரு பிரேரணை நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவேண்டும்.

அதனை முயற்சிக்காமல் நாடாளுமன்ற சிறப்புரிமையைத் துஷ்பிரயோகம் செய்து வக்கிரம் நிறைந்த இனவாதச் சிந்தனையை சரத்வீரசேகர நாடாளுமன்றில் கக்கியுள்ளார். இதன் மூலம் ஒட்டுமொத்த நீதித்துறையின் சுதந்திரத்துக்கும் அவர் சவால்விடுத்துள்ளார். இந்தவிடயத்தில் நீதித்துறையின் சுதந்திரம் பறிக்கப்பட்டு சட்டத்தின் ஆட்சி அவமதிக்கப்பட்டுள்ளது. நாட்டின் சகல சட்டத்தரணிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இந்த விவகாரத்தில் சரத்வீரசேகரவுக்கு எதிராக தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்- என்றுள்ளார். (ச-26)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மோடி, ரணில் சந்திப்பு ஏற்பாடுகள் முழுமை!

கொழும்பு, ஜூலை 10



**ஜனாதிபதி ரணில் மற்றும் இந்தியப் பிரதமர் மோடி இருவரும் எதிர்வரும் 21ஆம் திகதி சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ள நிலையில், இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் முழுமையடைந்துள்ளன. இந்தச் சந்திப்புத் தொடர்பான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிப்படுத்தல்கள் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயால் ரணிலுக்கு வழங்கப்பட்டுள்ளன.**

20ஆம் திகதி மூன்று நாள்கள் பயணமாக இந்தியாவுக்குச் செல்லும் ரணில், 21ஆம் திகதி இந்தியப்பிரதமரைச் சந்திக்கவுள்ளார். அத்துடன் இந்தியாவின் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோரையும் இந்தப்பயணத்தின்போது ரணில் சந்திக்கவுள்ளார்.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தால் ரணில் ஜனாதிபதியான பின்னர், அந்தப் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்த்துவைக்க இந்தியா பெருமளவு உதவிகளை வழங்கியது. அத்துடன், ஜனாதிபதியாக ரணில் இந்தியாவுக்குச் செல்லும் முதலாவது சந்தர்ப்பமும் இதுவே. இத்தகையதொரு பின்னணியில் ரணிலின் இந்தப் பயணம் கவனக்குவிவைப் பெற்றுள்ளது. இதேவேளை - 13 ஆவதுதிருத்தம், மாகாணசபைத் தேர்தல் மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ரணிலிடம் சில வலியுறுத்தல்களை மோடி மேற்கொள்வார் என்றும் கருதப்படுகின்றது. (ம)

## இலங்கைக்கு

## அரசியல் கற்பிக்க ஆர்வத்துடன் சீனா

கொழும்பு, ஜூலை 10

இலங்கையில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் இளையவர்களுக்கு, அது குறித்த கற்பித்தல்களை வழங்குவதற்கு சீனா திட்டமிட்டுள்ளது.

சீன வெளிவிவகாரத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் யாவ் ஜியாங்குவோ மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவர் உள்ளிட்ட ஆறு பேரைக் கொண்ட குழுவினர் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் ருவன் விஜயவர்த்தனவை கடந்த வாரம் சந்தித்தனர். இதன்போதே, இலங்கையின் இளம் அரசியல் தலைவர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவதற்கான ஆர்வத்தை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

மேலும் அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து செயற்படக்கூடிய புதிய வாய்ப்புகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளனர். (ம)

## வேலைவாய்ப்பற்ற இளையோருக்கு

## சுற்றுலா, விருந்தோம்பல் இலவச கற்கை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

வடக்குமாகாணத்திலுள்ள வேலைவாய்ப்பற்ற இளையோருக்கு சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ துறைகளில் இலவச பயிற்சிகளை வழங்க வடமாகாண சுற்றுலா பணியகம் தீர்மானித்துள்ளது.

அரச அங்கீகாரம் பெற்ற சுற்றுலா மற்றும் விடுதிகள் முகாமைத்துவ நிறுவனத்தால் 3 மாத காலங்களுக்கு இந்தப் பயிற்சிநெறி நடத்தப்படவுள்ளது.

பயிற்சிநெறியில் பங்கேற்போர் வடமாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கின்ற 18 வயத்துக்கு மேற்பட்ட வேலைவாய்ப்பற்றவராகவும் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்றிருப்பதும் போதுமானது.

இதில் பொருளாதாரம் நலிவுற்ற குடும்ப அங்கத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆர்வமுள்ளோர் தங்களது தகவல்களை அந்தந்தப் பிரதேச செயலகங்களினூடாக அல்லது **'பணிப்பாளர் சுற்றுலா பணியகம்', ஏ-9 வீதி , கைதடி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கமுடியும் .

மேலதிக விவரங்களை **0212227311** எனும் தொலைபேசியூடகாவோ அல்லது **tourismnorth.srilanka@gmail.com** என்ற மின்னஞ்சல் ஊடாகவோ பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-159)

## எல்லைதாண்டிய மீன்பிடியால் 15 இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 10



இலங்கை கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 15 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - நெடுந்தீவு கடற்பரப்புக்குள் வைத்து இரண்டு படகுகளில் வந்த 15 மீனவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயணித்த இரு படகுகளும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டதுடன், இந்திய மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று மாலை முற்படுத்தப்பட்டு, எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம-26,23)




**உடையார் இடுப்பில சலங்கை கட்டி ஆடினமாதிரி கூத்துக் காட்டியிருக்கு வலிகாமம் வலயத்தில உள்ள பள்ளிக்கூடமொண்டு. இப்ப காலம் எப்பிடிக் கெட்டுக் கிடக்கெண்டு சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அதிலையும் இரவுநேரத்தில றோட்டால ஆக்கள் போய்வாறதெண்டா, அமேசான் காட்டுக்குள்ள போறதைவிடவும் கடும் கஷ்டம். ஒருபக்கம் அக்சிடெண்டுகள், இன்னொரு பக்கம் களவுகள், மற்றொரு பக்கம் வாள்வெட்டுகள், அதுகளையும் தாண்டினால் பொம்பிளைப் பிள்ளையோட சேட்டைவிடவெண்டே அலையிற கஞ்சாக் கும்பல்கள் எண்டு வழிநெடுக ஊரிப்பட்ட ஆபத்துகள். இப்பிடியான நிலையில, அந்தப் பெரிய பள்ளிக்கூடம் பரிசளிப்பு விழாவை பின்னேரம் தொடங்கி நடுச்சாமம் பன்னிரண்டு மணிவரை நடத்தியிருக்கு.**

பள்ளிக்கூடப் பரிசளிப்பு விழாக்கள் எண்டால் அதைப் பகல் நேரத்தில நடத்துறதுதான் எல்லாருக்கும் வசதி. அதுதான் பாதுகாப்பும்கூட. அப்பிடியிருக்க இந்தப் பள்ளிக்கூடம் மட்டும் இரவு வரைக்கும் பரிசளிப்பு விழாவை நடத்திக் கொண்டு வருகுது. சரி, ஏதும் 'சென்ரிமென்ட்' காரணமா இரவு வரை நடத்துகினம் எண்டு வைச்சுக் கொண்டாலும், இப்பிடி ஏமம்சாமம் வரைக்கும் பரிசளிப்பு விழாவை வைக்கிறதுக்கு என்ன காரணம் எண்டு ஒருத்தருக்கும் விளங்கேலை. இத்தனைக்கும் அது ஒரு கலவன் பள்ளிக்கூடம். ஏழெட்டுக் கிலோமீற்றர் தூரத்தில இருந்தெல்லாம் அந்தப் பள்ளிக்கூடத்துக்கு பிள்ளையள் படிக்க வாறவை.

**பன்னிரண்டு மணிக்குப் பிறகு பொம்பிளைப் பிள்ளையள் இந்தக் காலத்தில எப்பிடி வீட்டை போவினம் எண்டு பள்ளிக்கூட நிர்வாகம் யோசிக்கிறேலையோ? 'அவை பெற்றோருடன் போவினம்' எண்டு சொல்லக்கூடும். ஆனால் ஒரு பிள்ளையை ஏத்த வீட்டில உள்ள அத்தனை பேரும் படைபட்டாளமா வரமாட்டினம் தானே. ஆரும் ஒராள் தானே வருவினம். நாடு கெட்டிருக்கிற சூழலில, பிள்ளையோட அந்தச் சாமத்தில தனிச்சுப் போறது பாதுகாப்பானதில்லையே. அதோட அந்தப் பரிசளிப்பு விழாவில இரண்டுமூண்டு பெடியள் குடிச்சுப்போட்டு நிண்டதெண்டும் கதை. அந்தக் கதை உண்மையெண்டால் அதுக்கும் காரணம் பள்ளிக்கூட நிர்வாகம் தான். இப்பிடி நேரங்கெட்ட நேரம் வரைக்கும் நிகழ்வை நடத்தினால் பிள்ளையள் தறிகெட்டுப் போற சான்ஸ் கூடத்தானே. பள்ளிக்கூடம் எண்டது தனியப் பாடங்களை மட்டும் படிப்பிக்கிற இடமில்லை. பிள்ளையள் எப்பிடி ஒழுங்கான பிள்ளையளா வளரவேணும் எண்டதையும் சொல்லிக்குடுக்கிற இடம். ஆனால் இப்பிடியான சிலர் பிள்ளையள் கெடுகிறதுக்குதான் வழி சொல்லிக் குடுப்பினம்போல இருக்கு.**

**எத்தினையோ பெரிய அறிஞர்களை உருவாக்கின பள்ளிக்கூடத்தின்ர பேரை கெடுக்கவெண்டுதான் இப்பிடிச் சாமம் வரை பரிசளிப்பு விழாவை வைக்கினமோ? ஒருவேளை ஏதும் பேய் பிசாசுக்கும் பள்ளிக்கூடம் சார்பாக பரிசு கிடைச்சு, அதுகளுக்கு பரிசைக் குடுக்கத்தான் இப்பிடி சாமம் வரைக்கும் விழாவை இழுத்தடிச்சிருப்பினமோ? எல்லாம் பள்ளிக்கூடத்து நிர்வாக 'மகா ஜனங்களுக்கே' வெளிச்சம்!**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடிதண்ணீர் விநியோகமின்றி நாவற்குழி வீட்டுத்திட்ட மக்கள்

## நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலரிடம் கோரிக்கை

**சாவகச்சேரி, ஜூலை 10**

**நாவற்குழி ஐந்து வீட்டுத் திட்ட கிராமத்துக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்படாமையால் குடிதண்ணீரைப் பெறுவதற்காக தூரஇடங்களுக்கு அலைய வேண்டியேற்பட்டுள்ளது என்று அந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.**

இதுதொடர்பில் அங்குள்ள 30 குடும்பங்கள் இணைந்து தென்மராட்சிப் பிரதேச செயலரிடமும் முறையிட்டுள்ளனர்.

கைதடி வடக்கிலிருந்து குழாய் மூலம் நீர் வழங்கல் சபையால் நீர் வழங்கப்படுகின்றது. ஆயினும் ஒரு சில குடும்பங்களுக்கு மாத்திரமே குடிதண்ணீர் வழங்கப்படுகிறது.

அதனால் ஏனைய குடும்பங்கள் குடிதண்ணீரைப்பெற நாவற்குழி மற்றும் கைதடி போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

எனவே ஏனைய குடும்பங்களுக்கும் குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-9)

# யாழில் இம்முறை 'க்ளோகல்' கண்காட்சி!



யாழில் இந்தமாதம் 15ஆம், 16ஆம் திகதிகளில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் உள்ளிட்ட பல சேவைகளுக்கான விழிப்புணர்வுச் செயற்றிட்டமும் க்ளோகல் கண்காட்சியும் நடைபெறவுள்ளது.

'க்ளோகல் 2023' எனும் தொனிப்பொருளில் 15 மற்றும் 16ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் முற்றவெளித் திடலில் (வீரசிங்கம் மண்டபம் முன்பாக) இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சின் ஊடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் பங்களிப்போடு, சர்வதேச மற்றும் உள்நாட்டு வேலைவாய்ப்புகளுக்காகக் காத்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கான செயற்றிட்டமே இது.

வெளிநாட்டுத் தொழில்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு மற்றும் வேலைவாய்ப்பு, ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் தொழில்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகள், ஆலோசனைச் சேவைகள், பெற்றுக்கொண்ட திறன்களுக்கான அரசாங்கச் சான்றிதழ்கள், தொழிற்றுறைப் பயிற்சிக்கான வாய்ப்புகள் மற்றும் வழிகாட்டுதல்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான தொழிற்பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்புகள், தொழிலாளர்களுக்கான கல்வி வாய்ப்புகள், உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் கண்காட்சியில் பகிரப்படவுள்ளதுடன், இளைஞர், யுவதிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், தொழிலாளர் திணைக்களம் உள்ளிட்ட தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அனைத்துத் துணை நிறுவனங்கள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு இலங்கை மத்திய வங்கி, ஊழியர் சேமலாப நிதியம், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, சமூக சேவைகள் திணைக்களம் உள்ளிட்ட திணைக்களங்கள் அனுசரணை வழங்குகின்றன.

யாழ்ப்பாணத்தில் உள்ள அல்லது வடமாகாண இளைஞர், யுவதிகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழிற் கற்கைகள், தொழிற்பயிற்சிகள் தொடர்பான சந்தேகங்கள் மற்றும் தேவைகளை நிவர்த்திசெய்ய இந்த க்ளோகல் வழிகாட்டி கண்காட்சியில் பங்குபற்றி தமது வேலைவாய்ப்பு தொடர்பான விளக்கங்களையும், வழிகாட்டல்களையும் பெற்றுக்கொள்ள முடியும். மக்கள் தமது சந்தேகங்களையும், தேவைகளையும் தீர்த்துக்கொள்ள www.glocal.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசித்து பதிவுகளை மேற்கொள்வதுடன், தமது கேள்விகளுக்கான அல்லது பிரச்சினைகளுக்கான தீர்வையும் பெற்றுக்கொள்ளமுடியும். எந்தவொரு தயக்கமுமின்றி, அனைத்து விடயங்களிலும் தெளிவைப் பெற இளைஞர், யுவதிகள் இந்த க்ளோகல் கண்காட்சியைப் பார்வையிட்டு பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் ஏனைய துறைசார்ந்த நிறுவனங்கள் அழைப்புவிடுத்துள்ளன.

## நூல் அறிமுகம்

கிளிநொச்சி, ஜூலை 10

கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில், எழுத்தாளர் சேனையூர் பிரம்மியா சண்முகராஜா எழுதிய 'கனதி' சிறுகதை நூல் வெளியீடு கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச மண்டபத்தில் கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை மாலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ய-113)

## சி.டி.விக்ரமரத்னவுக்கு மீண்டும் பதவி நீடிப்பு

கொழும்பு, ஜூலை 10

பொலிஸ்மா அதிபராக பதவிவகித்த சி.டி.விக்ரமரத்னவின் பதவிக்காலம் மேலும் 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என பொதுப்பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் நேற்று அறிவித்தார். (அ-ஒ,இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். பிரச்சினைகள் ஏற்படலாம்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். அனுகூலம் உண்டாகும். ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். பிரமுகர் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். ஆரோக்கியம் மேம்படும்.

**கடகம்:** எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்த்துவிடுவது அவசியம். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளில் ஒருமுறைக்குப் பலமுறை சிந்தித்து ஈடுபடவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். மனக்கசப்புகள் நீங்கும். தாய்மாமன் வழியில் சுபச்செலவு ஏற்படும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**துலாம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. முயற்சிக்கு ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். சில சங்கடங்கள் ஏற்படும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புண்டு. பேசும்போது பொறுமை அவசியம்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் குறையும். முக்கியமான முடிவு எதுவும் இன்றைக்கு எடுக்க வேண்டாம். நிதானம் தேவை.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தொடங்கலாம். பெரியவர்களின் ஆலோசனை அவசியம். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு. எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படும்.



அனலைதீவு நயினாகுளம் ஹரிகரபுத்திர ஐயனார் கோயிலின் பாலஸ்தாபன பூர்வாங்கக் கிரியைகள் கடந்த 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. (ய-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நாளொரு நல்வார்த்தை

பயத்தை வெல்வதே மனிதனின் முதல் கடமை; அதைச் செய்யாத வரை அவனால் செயற்பட முடியாது.

— தோமஸ் கார்லைல்

# பாலையும் சோலையும்!

சுமார் இரண்டு மாதகால இடைவெளியில் கட்டாரும் இலங்கையும் தனித்தனியாக ஓர் அறிவிப்பை விடுத்திருக்கின்றன. இந்த இரண்டு அறிவிப்புகளும் முற்றிலும் முரணானவையாகவும் அதேநேரம் ஒரே துறையைச் சேர்ந்த அறிவிப்புகளாகவும் அமைந்திருக்கின்றன. கொழும்பும் டோகாவும் அப்படி என்னதான் அறிவிப்பைச் செய்திருக்கின்றன என்று பார்த்தால், 'பாலை ஏற்றுமதி செய்யும் நிலையை அடைந்திருக்கின்றோம்' என்று அறிவித்து அதை செயற்படுத்தவும் ஆரம்பித்திருக்கின்றது கட்டார். ஆனால், இலங்கையோ 'பால் உற்பத்தியை மேம்படுத்த விரைவில் வலுவான திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்' என அறிவித்துள்ளது.


இங்கே விடயம் என்னவென்றால், கட்டார் வெறும் கட்டாந்தரை. பாலைவனத் தேசம். கால்நடை வளர்ப்புக்கோ அல்லது கால்நடைகளுக்கான உணவை உற்பத்தி செய்வதற்கோ சபிக்கப்பட்ட தேசம்தான் அது. கட்டார் பால் தேவையை நிறைவுசெய்வதற்காக முற்றுமுழுதாக சவூதி அரேபியாவைச் சார்ந்திருந்தது. 2017 – 2018 காலப்பகுதியில் தங்களின் பரமவைரியான ஈரானுடன் கட்டார் நெருக்கம் காட்டுகின்றது என்று குற்றஞ்சாட்டிய வளைகுடா நாடுகள் கட்டாரைத் தனிமைப்படுத்தின. இதனால், கட்டாரின் 'சார்புப் பொருளாதாரம்' துண்டிக்கப்பட்டது. பால் தேவையை நிவர்த்திசெய்ய முடியாமல் அல்லலுற்றது. இவ்வாறு தொடர்ந்தும் இருந்துவிட முடியாது என்பதனால், 2017ஆம் ஆண்டின் பிற்பகுதியில்தான் பால் பண்ணைகளை பிரமாண்டமாக அமைப்பது என்ற முடிவை எடுத்தது கட்டார்.

அமெரிக்காவில் இருந்தும், அவுஸ்திரேலியாவில் இருந்தும் விமானங்கள் மூலம் உயர் இன கறவைப் பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டன. கட்டாரின் 'பால்ட்னா' பண்ணையில் மட்டும் இன்றைய திகதியில் சுமார் 10ஆயிரம் பசுக்கள் உள்ளன. இதைவிட பல பண்ணைகள் அந்த நாட்டில் புதிதாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. இன்று கட்டார், எந்த வளைகுடா தன்னைப் புறக்கணித்ததோ அதே வளைகுடாவுக்குப் பால் ஏற்றுமதி செய்யும் நிலையில் இருக்கின்றது. உலகின் 77ஆவது மிகப்பெரிய பால் உற்பத்தி நாடு இப்போது கட்டார்தான். இத்தனைக்கும் 5 வருடங்களுக்கு முன்புவரை கட்டாரிடம், தன் மக்களுக்குத் தேவையான பாலை உற்பத்தி செய்வதற்கான அடிப்படைக் கட்டமைப்புக்கூட இருக்கவில்லை.

ஆனால், கட்டாரைப்போல கட்டாந்தரை அல்ல இலங்கை. இதுவொரு பசுமைப்பூமி. மிகச்சிறந்த மேய்ச்சல் தரைகளை உருவாக்கக்கூடிய இயற்கை நிலை இங்கிருக்கின்றது. மிகக்குறைந்த செலவில் கால்நடைகளுக்கு உணவை உற்பத்தி செய்யக்கூடிய ஏதுநிலைகள் தாராளமாக இருக்கின்றன. ஆனால், இன்னமும் 'பாலுற்பத்தியை மேம்படுத்த விரைவில் நடவடிக்கை', 'பாலுற்பத்தியை மேம்படுத்த வலுவான திட்டம் தயார்' என்பதான பழைய பல்லவியைத்தான் மாறிமாறி பாடிக்கொண்டிருக்கின்றார்களே தவிர நடைமுறைச் சாத்தியமான வழிகளை எவரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

வறுமைச்சுட்டி இலங்கையில் அதிகரித்திருக்கின்றது. பொருளாதாரச் சிதிலத்தின் இலவச இணைப்பான போஷணைக் குறைபாடு இலங்கையர்களை ஆட்கொண்டிருக்கின்றது. பாலும் இறைச்சியும் மிகச்சிறந்த நிறை உணவுகள். குறைந்தபட்சம் கால்நடைத்துறையை மேம்படுத்தியிருந்தால்கூட போஷணைக் குறைபாடு என்ற 'பேரிடர் இழிநிலையைத்' தவிர்த்திருக்கலாம். பட்டுணர்ந்த பின்னரும்கூட போர்க்கால அடிப்படையில் எந்தவொரு காத்திரமான அபிவிருத்திகளையும் முன்னெடுத்ததாகத் தெரியவில்லை. மாறாக, வவுனியாவில் சீனித்தொழிற்சாலை, கடனை அடைப்பதற்குக் கஞ்சாப் பயிர்ச்செய்கை இவ்வாறான விஷப்பரீட்சைகளைத்தான் கொழும்பு மாறிமாறி மேற்கொண்டபடியிருக்கின்றது.

என்ன வளம் இருந்தென்ன: அதைச் சரியாகப் பயன்படுத்தக்கூடிய மூளைவளம் இல்லையே!



# உழைப்பாளிகளின் உயிர்மூச்சில் கைவைக்கின்றது அரசாங்கம்

## ஒருபோதும் இணங்கோம் என சம்பிக்க தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 10**
**உள்நாட்டுக் கடன்மறுசீரமைப்பில் நாட்டின் செல்வந்தர்களையும் ஊழல்வாதிகளையும் விட்டுவிட்டு, அப்பாவித் தொழிலாளர்களின் இறுதிமூச்சாகக் கருதப்படும் ஊழியர் சேமலாப நிதியில் அரசாங்கம் கைவைத்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

மஹரகமவில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- ராஜபக்சக்களின் தூரநோக்கமற்ற பொருளாதார முகாமைத்துவத்தால், பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்து நாடு வங்குரோத்தாகியுள்ளது. பொருளாதாரப் பாதிப்புக்கு ராஜபக்சக்கள் நிச்சயம் பொறுப்புக்கூறவேண்டும். தேசியக் கடன்களை மறுசீரமைக்க அரசாங்கம் எடுத்த திட்டங்கள் தவறாகவுள்ளன. 2027ஆம் ஆண்டு முதல் 2032ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மத்திய வங்கி விநியோகித்துள்ள திறைசேரி உண்டியல்களைப் பிணைமுறிகளாக மாற்றியமைக்க உத்தேசிக்கப்படுகிறது. திறைசேரி உண்டியல்களைப் பிணைமுறிகளாக மாற்றியமைக்கும்போது மத்திய வங்கியின் ரூபாவின் பெறுமதி அலகு நெருக்கடியை எதிர்கொள்ளும். தேசியக் கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் செல்வந்தர்களை விட்டுவிட்டு உழைக்கும் மக்களின் ஊழியர் சேமலாப நிதியத்தில் கைவைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒருபோதும் நாம் இணங்க மாட்டோம் -என்றார். (ச-இ)

# இந்தியா ஆபத்பாந்தவன்

## சபாநாயகர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 10
இந்தியா எப்போதும் இலங்கையின் நெருக்கமான கூட்டாளியும் நம்பகமான நண்பனுமாகும். பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த இலங்கையைக் காப்பாற்றி, ஏற்படவிருந்த இரத்தக்களரியைத் தவிர்த்த இந்தியாவுக்கு நாம் நன்றியைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

-இவ்வாறு இந்திய சுற்றுலாப் பிரதிநிதிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்துபசாரத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்;
இலங்கை எதிர்கொண்ட பேரழிவுமிக்க நிதி நெருக்கடியின்போது இந்தியாவைப்போல வேறு எந்தநாடும் உதவியது இல்லை. இந்தியா உதவிக்கரம் நீட்டியதை என்றும் மறவோம்- என்றார். (ச-இ)

**நாளை**

11.07.2023
செவ்வாய்க்கிழமை
ஆனி 26

சுபநேரம் : 10.29 – 11.59
ராகுகாலம் : 02.59 – 04.29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டியாகோ கார்சியாவில் தவிக்கும் தமிழர்கள்!



## புகலிடக் கோரிக்கையாளர்களால் வழக்கு

**கொழும்பு, ஜூலை 10**

**இலங்கையிலிருந்து கனடாவுக்கு சட்டவிரோதமாக தப்பிச்செல்ல முயன்று, இந்தியப் பெருங்கடல் பகுதியில் சிக்கிய தமிழர்கள் பிரிட்டனின் ஆளுகைக்குட்பட்ட டியாகோ கார்சியா எனும் தீவில் மாதக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டு வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்று இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் குழுவால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.**

வழக்கில் பிரிட்டனின் மூன்று அமைச்சர்கள் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர். கடந்த 2021ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அவர்கள் கனடாவுக்குச் செல்ல முயன்றபோது, படகு பழுதடைந்தமையால் டியாகோ கார்சியா என்னும் தீவில் அடைக்கலம் புகுந்தனர். கடந்த ஒன்றரை வருடங்களுக்கும் மேலாக, அவர்கள் அங்குத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்தக் காலப்பகுதியில் அங்கு பாலியல் மற்றும் உடல் ரீதியான தாக்குதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. முகாமில் நிலவிய அசாதாரண சூழ்நிலையால் மன அழுத்தத்துக்குள்ளாகி பலர் உயிரை மாய்க்கும் முயற்சிகளும் பதிவாகியுள்ளது. இவை தொடர்பாக பிரிட்டன் அரசு மற்றும் பிரிட்டிங் இந்திய பெருங்கடல் நிர்வாகங்களுக்கு முறைப்பாடுகளை முன்வைத்தும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என புகலிடக் கோரிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## துஷ்பிரயோகக் காணொலிகள் வெளியிட்டால் சட்டம் பாயும்!

### பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 10

பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பாக கீழ்த்தரமானதும் அபகீர்த்தியை ஏற்படுத்தக்கூடியதுமான விடயங்களை காணொலியாகப் பதிவுசெய்து சமூக ஊடகங்களில் வெளியிட்டால், அத்தகையவர்களுக்கு எதிராகச் சட்டம் பாயும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அண்மையில் நவகமுவ பகுதியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் விளக்கமளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பெண்களைத் தாக்கி மற்றும் பாலியல் துன்புறுத்தல் மேற்கொண்டு காணொலி வெளியிடுவது சட்டவிரோதக் குற்றமாகும், இத்தகையவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

அந்தவகையில், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும்முகமாக இவ்வாறான காணொலிகளை வெளியிடுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது - என்றார். (ச-இ)

## யானை தாக்கியதில் ஒருவர் பலி!

மட்டக்களப்பு - வெல்லாவெளியில் யானை தாக்கியதில் குடும்பத் தலைவர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார் என வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தும்பங்கேனி - சுரவனையடி ஊற்று கிராமத்தைச் சேர்ந்த 59 வயதுடைய 4 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார். (ச-22)



## சக்சுரினின் பராமரிப்பாளர் தாய்லாந்தால் கௌரவிப்பு


கொழும்பு, ஜூலை 10

சக்சுரின் யானையை பராமரித்த, இலங்கையைச் சேர்ந்த யானைப் பாகனை தாய்லாந்தின் மன்னரும் மகாராணியும் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

தெஹிவளை மிருகக்காட்சிசாலையை சேர்ந்த டொன் உபுல் ஜயரட்ண என்ற அந்தப் பாகனுக்கு, தாய்லாந்தில் இடம்பெற்ற நிகழ்வில் மன்னரின் பிரதிச் செயலாளர் பரிசில்களை வழங்கி கௌரவித்துள்ளார்.

தாய்லாந்தின் இயற்கை வள சூழல் விவகார அமைச்சில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது. தாய்லாந்தில் சக்சுரினை பராமரிப்பதற்காக இலங்கையிலிருந்து அதனுடன் பயணித்த தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையின் யானைப்பாகனையே தாய்லாந்து கௌரவித்துள்ளது.

தாய்லாந்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட சக்சுரின், இலங்கையில் துன்புறுத்தல்களை எதிர்கொண்டதையடுத்து தாய்லாந்து அந்த யானையைத் திரும்பப் பெற்றது. சக்சுரின் தற்போது தாய்லாந்தின் யானைகளின் பாதுகாப்பு நிலையத்தில் பராமரிக்கப்படுகின்றது. (ம)



## மாற்றுத்திறனாளிகள்

## 'லைசென்ஸ்' பெற புதிய முறைமைகள்

கொழும்பு, ஜூலை 10

மாற்றுத்திறனாளிகள் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான புதிய முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது என மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கென விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்தார். (ச-இ)

## நிர்வாணப்படுத்தி காணொலி எண்மருக்கு விளக்கமறியல்!

கொழும்பு, ஜூலை 10

நவகமுவ, பொமிரிய ராஸ்ஸபான பிரதேசத்தில், பௌத்த தேரருடன் தவறான உறவைக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் யுவதி மற்றும் அவரது தாய் ஆகியோரை நிர்வாணப்படுத்தித் தாக்கி அதை காணொலியாகப் பதிவுசெய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 8 பேரையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவெல பதில் நீதிவான் ஹேமந்த வெத்தசிங்க உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் 8 பேரையும் அன்றைய தினம் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், முறைப்பாடு செய்தவருக்கு எதிராக முறைப்பாடு செய்ய தமது தரப்பு விரும்புவதாக நீதிவானிடம் கேட்டனர். குறித்த முறைப்பாடுகளை எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ம)

## இலங்கை – ஆஸி. விரைவில் பேச்சு!



கொழும்பு, ஜூலை 10

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான நான்காவது சுற்று இருதரப்புப் பேச்சு மற்றும் இரண்டாவது கடற்பிராந்திய மாநாடு மற்றும் மூன்றாவது வர்த்தக மற்றும் முதலீட்டு கூட்டு ஆணைக்குழுக்கூட்டம் என்பன அடுத்த வாரம் நடைபெறவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமை ஆகிய தினங்களில் கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் இடம்பெறவுள்ளன.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட இருப்பதுடன், அரசியல், வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, சுற்றுலா, விவசாயம், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைசார்ந்த விடயங்கள் தொடர்பிலும் மதிப்பிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)




## தூக்கிலிருந்து சடலமாக மாணவியொருவர் மீட்பு!

களுத்துறை - அகலவத்த பகுதியில் 13 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திருமண நிகழ்வொன்றுக்கு தானும் வருவதாகக் கூறிய மகளை, நிகழ்வில் பங்கேற்க அனுமதிக்காமல், பாடசாலை செல்லுமாறு தாயார் எச்சரித்துள்ளார். அன்றையதினம் இரவு மாணவியைக் காணாத நிலையில் வீட்டின் கழிப்பறையை திறந்து பார்த்தபோது மாணவி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மாணவி தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெரும் நெருக்கடிக்குள் நாட்டின் சுகாதாரத்துறை

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடும் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 10

**நாட்டின் சுகாதாரத்துறை பெரும் நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளது. சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகாண அரசாங்கம் தவறுமாயின் நாடு பெரும் மருத்துவ நெருக்கடிக்குள் தள்ளப்படும் - இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

அந்தச் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போது இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் சுகாதாரத்துறையில் ஐந்து பெரும் பிரச்சினைகள் எழுந்துள்ளன, இந்தப் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டும்.

இந்தப் பிரச்சினைகளில் மருந்துத் தட்டுப்பாடு மிக முக்கியமான பிரச்சினையாகும். மறுபுறத்தில் நாட்டிலுள்ள மருந்துகளின் தரம் தொடர்பான சிக்கல் தற்போது ஏற்பட்டுள்ளது. பதிவு செய்யப்படாத மருந்துகளை நாட்டுக்குக் கொண்டு வந்துள்ளமையால் இந்தப் பிரச்சினை எழுந்துள்ளது.

மருந்து இறக்குமதி விலைமனுக் கோரல் செயற்பாடுகளின்படி நடைபெறுவதில்லை. உரிய முறையில் விலைமனு மேற்கொள்ளப்படாமல் மருந்துகளைக் கொள்வனவு செய்துள்ளமையால் மருந்தின் தரம் தொடர்பில் தற்போது பிரச்சினைகள் எழுந்துள்ளன.

அதேவேளை ரூபாவின் பெறுமதி அதிகரிக்கும்போது அதன் பிரதிபலன்கள் மக்களுக்கு வழங்கப்படவேண்டும்.

இருப்பினும், அவை மக்களைச் சென்றடைவதில்லை. மனித வளம் தொடர்பிலான பிரச்சினைகள் நான்காவது பிரச்சினையாகும்.

விசேட மருத்துவ நிபுணர்கள் நாளுக்கு நாள் நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர். புதிதாக நியமனம் பெறும் மருத்துவர்கள்கூட நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். அத்துடன் மருத்துவமனைகளில் மருத்துவ இயந்திரங்கள் செயற்படுவதில்லை.

இவற்றுக்கு உடனடியாகத் தீர்வு காணப்படாவிட்டால் நாடு பெரும் மருத்துவ நெருக்கடிக்குள் சிக்கிக்கொள்ளும். ஆனால், சுகாதார அமைச்சர் கூறும் விடயங்கள் கேலிக்கூத்தாகவுள்ளன - என்றார். (எ-இ)

## தண்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆனைக்கோட்டையில் கைதானவருக்கு நீதிமன்றம் 3 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்துள்ளது.

சந்தேகத்துக்கிடமாக நடமாடிய 22 வயது இளைஞர் ஒருவர் சோதனைக்குள்ளாக்கப்பட்டபோது அவரிடம் இருந்து ஒரு கிராம் மற்றும் 200 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞரைக் கைது செய்த பொலிஸார், அவரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தினர். அவரை நீதிமன்றம் தண்டம் விதித்து எச்சரித்து விடுவித்தது. (எ-125)

## வன விலங்குகளுக்கு பிளாஸ்ரிக் பேரரக்கன்



வவுனியாவில் நேற்றுப் பேரணி

வவுனியா, ஜூலை 10

பிளாஸ்ரிக் பொருள்கள் வன விலங்குகளுக்குப் பேராபத்தை ஏற்படுத்துகின்றன. எனவே பிளாஸ்ரிக் பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி வவுனியாவில் நேற்று விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்து பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா பல்கலைக்கழக மாணவர்களின் பங்கேற்புடன் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பேரணியின்போது வீதியோரம் இருந்த பிளாஸ்ரிக் பொருள்கள் பேரணியில் கலந்துகொண்டவர்களால் அப்புறப்படுத்தப்பட்டன. (ம-18)

## வெல்லவாய வனத்தில் தீ

## நூற்றுக்கணக்கான ஏக்கர் தீயில் எரிந்து நாசம்

கொழும்பு, ஜூலை 10

வெல்லவாய - பிபிலஹெல பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் பரவிய தீயால் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பு எரிந்து நாசமாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தீப்பரவல் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. குறித்த பகுதியில் சில நாள்களாகக் கடும் வறட்சி மற்றும் காற்றுடன் கூடிய காலநிலை நிலவி வந்தநிலையில், இந்தக் காலநிலை ஏதுநிலையால் தீ வேகமாகப் பரவியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## கசிப்புடன் இளைஞன் கைது

கோப்பாய் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு கசிப்பு உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளான். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்றும் அவரிடம் இருந்து ஒரு லீற்றர் 500 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-125)




# டொலருக்கு அடிமையானோரே ராஜபக்சக்களுக்கு எதிர்ப்பாம்!

## சாகர காரியவசம் கண்டுபிடிப்பு

டொலருக்கு அடிமையானவர்களே ராஜபக்சக்களுக்கு எதிராகத் திட்டமிட்ட வகையில் பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவே ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ராஜபக்சக்கள் நாட்டுக்குச் சேவையாற்றினார்களே தவிர நாட்டுக்குத் தீ வைக்கவில்லை. பொதுஜன பெரமுன தலைமையிலான எமது அரசாங்கத்தில் அமைச்சரவையில் இருந்தவர்கள் பொருளாதாரப் பாதிப்பை அரசியல் நெருக்கடியாக மாற்றியமைத்தார்கள். ஜனநாயகப் போராட்டம் என்று குறிப்பிட்டுக்கொண்டு கடந்த ஆண்டு பயங்கரவாதச் செயற்பாடுகள் மாத்திரமே முன்னெடுக்கப்பட்டன.

டொலருக்கு அடிமையானவர்கள் ராஜபக்சக்களுக்கு எதிராகத் திட்டமிட்ட வகையில் பரப்புரைகளை முன்னெடுக்கிறார்கள். ராஜபக்சக்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவையை பெரும்பாலான மக்கள் நன்கு அறிவார்கள். போலியான பரப்புரைகளுக்கு மக்கள் ஏமாறமாட்டார்கள் - என்றார். (எ-இ)

## யாழ்தேவி ரயில் பரீட்சார்த்த பயணம்

வவுனியா, ஜூலை 10

அநுராதபுரம் ரயில் நிலையத்தில் இருந்து வவுனியா, ஓமந்தை ரயில் நிலையம்வரை யாழ்தேவி ரயில் நேற்றுப் பரீட்சார்த்தமாகப் பயணித்தது.

இந்தியக் கடனுதவி திட்டத்தின் கீழ் இந்திய நிறுவனத்தால் மஹவ முதல் ஓமந்தை வரையான ரயில்ப் பாதை சீரமைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக அநுராதபுரம் முதல் வவுனியா வரையான 43 கிலோமீற்றர் நீளமான ரயில் பாதையும், ஓமந்தை வரையான 13 கிலோமீற்றர் ரயில் பாதையும் சீரமைக்கப்பட்டன.

சீரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், பரீட்சார்த்த பயணமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்தேவி மணித்தியாலத்துக்கு 80 முதல் 100 கிலோமீற்றர் வேகத்தில் பயணித்தது.

அதேவேளை, ரயில் பாதை சீரமைப்புக்காக நிறுத்தப்பட்டுள்ள காங்கேசன்துறை கொழும்புக்கான ரயில் சேவையை எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள் பற்றாக்குறைக்கு அடுத்தசில வாரங்களில் தீர்வு

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜுலை 10**

**ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பற்றாக்குறைக்கு அடுத்த சில வாரங்களில் தீர்வு வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**

நுவரெலியாவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் மாகாண மட்டத்தில் கலந்துரையாடல்களை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம். விரைவில் கலந்துரையாடுவோம்.

வடமேல் மாகாணத்தில் இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பேன். அதன் பின்னர் மாகாணசபையுடன் இணைந்து மாகாண மட்டத்தில் முழுநாள் நிகழ்ச்சித்திட்டத்தை ஏற்பாடு செய்வேன்.

இங்குள்ள பாடசாலைகளில் 95 வீதப் பாடசாலைகள் மாகாணசபையின் கீழ் உள்ளன. அடுத்ததாக ஆசிரியர் பற்றாக்குறை இருப்பது எமக்கு நன்றாகவே தெரியும். அதிபர் பற்றாக்குறையும் உள்ளது. 26 ஆயிரம் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.

அவர்களில் தமிழ் ஆசிரியர்களும் சிங்கள ஆசிரியர்களும் உள்ளடங்குகின்றனர். அடுத்த சில வாரங்களில் நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை நிறைவுசெய்து ஆசிரியர் நியமனங்களை வழங்கவுள்ளோம். துரிதமாகப் பயிற்சிகளை வழங்கி ஆசிரியர்களை நியமிப்போம். மறுபுறம் ஆசிரியர்கள் இடமாற்றம் குறித்து தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி அந்தந்த மாகாணங்களுக்கு ஏற்றவகையில் முறைமையொன்று தயாரிக்கப்படவுள்ளது - என்றார். (எ-இ)

## சுதந்திரக் கட்சிக்கு வருமாறு சந்திரிகாவுக்கு அழைப்பு

### பொதுச் செயலாளர் தகவல்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆதரவு எமக்கு நிச்சயம் தேவை. கடந்த ஆண்டு அவர் உள்ளடங்கலாக மேலும் 9 பேரது கட்சி உறுப்புரிமை தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டது. அந்த தீர்மானத்தை மீளப்பெற்று அவர்களை மீண்டும் கட்சியில் இணைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் அவர் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் 15ஆம் திகதி சுதந்திர கட்சியின் நிறைவேற்றுக்குழுவும், மத்திய குழுவும் கூடவுள்ளன. அவற்றில் கடந்த ஆண்டு கட்சி உறுப்புரிமை தற்காலிகமாக நீக்கப்பட்ட 9 பேர் தொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ளது.

தற்காலிகமாக கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டவர்களில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் உள்ளடங்குகின்றார்.

அவர் சு.க.வின் சிரேஷ்ட ஆலோசகராகப் பணியாற்றியிருக்கின்றார். அவருக்கும் மீள அழைப்பு விடுக்கப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். அவர் இந்த கட்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருக்கின்றார். அவர் பரிந்துரைத்ததன் பின்னணியிலேயே மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டனர். கடந்த காலங்களில் எமக்கு பெரும் பலமாக அமைந்த அவரது ஒத்துழைப்புக்கள் மீண்டும் சுதந்திர கட்சிக்கு தேவையாகும். எனவே மீண்டும் கட்சியுடன் இணைவது தொடர்பாக அவர் சிந்திக்க வேண்டும். அவ்வாறு அவர் இணைவாரானால் நாம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வோம். சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டால் நாட்டின் முன்னேற்றத்துக்கு நாமும் ஒத்துழைப்பை வழங்குவோம் - என்றார். (ம)

# கண் சிகிச்சைகளுக்குப் பதிவை மேற்கொள்க!

தென்மராட்சி, ஜுலை 10

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நாளைமறுதினம் 12ஆம் திகதி புதன்கிழமைமுதல் மீண்டும் கண் கிளினிக் ஆரம்பமாகவுள்ளது.

மருத்துவமனையில் பிரதி மாதங்களில் இரண்டாவது புதன்கிழமைகளில் கண் கிளினிக் நடைபெறவுள்ளதால் கண் சம்பந்தமான சிகிச்சைபெற விரும்பும் மக்கள் மருத்துவமனையில் பதிவை மேற்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் யாழ்.போதனா மருத்துவமனையின் கண் சிகிச்சை அலகினரால் தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள கொடிகாமம், வரணி, கைதடி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் நடத்திய கண்புரை பரிசோதனை முகாமில் 900க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டதையடுத்து கண் பரிசோதனையின் அவசியத்தைக் கருத்திற்கொண்டு பிரதி மாதங்களின் இரண்டாவது புதன் கிழமைகளில் கண் கிளினிக் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-ய-9)


வீடுகளுக்கு வந்து கற்பித்தல் A/L வரை

ஆங்கிலம், தமிழ் மொழிமூலம்

கணக்கீடு, புவியியல், குடியியல், வரலாறு, ஆங்கிலம்.

077 331 6402



PEOPLE'S BANK

## தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

**மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.03.2022 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 21.07.2023 (வெள்ளிக்கிழமை), 22.07.2023 (சனிக்கிழமை) திகதியில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.**

யாழ் ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), தெல்லிப்பளை, மல்லாகம், காங்கேசன்துறை, யாழ் பிரதான வீதி, உரும்பிராய், ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, புத்தூர், சங்கானை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், கோப்பாய், அளவெட்டி, சாவகச்சேரி, கைதடி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, யாழ்.பல்கலைக் கழகம், திருநெல்வேலி, கல்வியங்காடு, யாழ். கன்னாதிட்டி, இணுவில், பருத்தித்துறை, புலோலி, கொடிகாமம்.

**நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி : 20.07.2023**

**ஏலவிற்பனை நடைபெறும் இடம் : யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை**

**திகதி : 21.07.2023 (வெள்ளிக்கிழமை)**
**22.07.2023 (சனிக்கிழமை)**

அறிவித்தலின்றி திகதியை ஒத்திபோடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமையகம்,**
**கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல : 021-222 2601 / 021-222 8602**
**தொலைநகல் : 021-222 2602**
**மின்னஞ்சல் : jafrho@peoplesbank.lk**


# மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 03 . 1939



இறப்பு 08 . 07 . 2023

## திருமதி அக்னேஸ் துரைச்சாமி

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அக்னேஸ் துரைச்சாமி கடந்த (08.07.2023) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரகாசம் பிரகாசியா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி துரைச்சாமியின் அன்பு மனைவியும், அலிஸ்ரஞ்சனி, கிறேஸ் பிறேமினி, றோசாந்தினி, அல்பேட் மோகனராஜ் (லண்டன்), றொபேட் ஆனந்தராஜ் (ஆசிரியர் - யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிலேந்திரன், அன்ரனிதாஸ், கனகேஸ்வரன், வினிபிறீடா, பிரியதர்சினி (ஆசிரியை -மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், அனிதா (ஆசிரியை- யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), கவிதா (ஆசிரியை - நல்லாயன் முன்பள்ளி) , விஜிதா (ஆசிரியை- யா/உடுவில் மகளிர் கல்லூரி), நிறூஜன், அனோஜன், சுபாசினி (ஆசிரியை- நவாலி நல்லாயன் முன்பள்ளி), டிலக்ஷினி (அருட்சகோதரி செபமாலை கன்னியர் மடம்), தர்சினி (ஆசிரியை- யா/நவாலி மகாவித்தியாயலம்), சியாமினி, முரளிதரன், அஸ்வினி, ஸ்ரபானியா, அலெக்ஸ் ஜெஸ்மியா (மு/ பாரதி மகாவித்தியாலயம்), தர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இவோன், ஸ்ரிவோன், ரிலோஷன், சமீரா, ஆர்ஜன், றெமாரியன் கெலன், ஆர்த்விகா, வேஜினி, பிறின்சன், கில்ரன், மில்கா, டிவைனி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (11.07.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நவாலி சென் பிற்றேஸ் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நவாலி கல்லறை தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**நவாலி தெற்கு, மானிப்பாய். 077 918 4126 தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


## முறையிடுக!

யாழ்ப்பாணம், ஜுலை 10

நல்லூர்ப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பொதுச்சந்தைகளில் வரி அறவீடு மற்றும் 10 வீதக் கழிவு தொடர்பான முறைப்பாடுகள் இருப்பின் **070 222 2700** என்னும் வட்ஸ் அப் இலக்கத்தின் ஊடாக சபைக்கு அறியத்தருமாறு செயலாளர் ஜெலீபன் அறிவித்துள்ளார். முறையிடப்படும் பட்சத்தில் எம்மால் அதுதொடர்பில் உடனடியாகப் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ய-66)

## ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர் திருமதி நாகம்மா சங்கரப்பிள்ளை**
(ஓய்வுபெற்ற பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி)
களபூமி, காரைநகர்

அன்புத் தாயே....
நீங்கள் இறையடி சேர்ந்து
இன்று ஒருவருடம் ஆகிறது
காலங்கள் விரைந்தாலும்
கண்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்

அம்மா!!!
உங்களைத் தாய் என்று
சொல்லவா
தந்தை என்று சொல்லவா
ஆசான் என்று சொல்லவா
வைத்தியர் என்று சொல்லவா
இவையாவுமாய் நின்று
எம்மை வளர்த்திட்ட பேசும்
தெய்வமே
இன்று மௌனித்தது ஏனோ...?

உங்கள் ஐந்து பிள்ளைகள்
நாம்
யாரையும் சார்ந்திராமல்
சிறப்பாக வாழ வழி தேடித்
தந்தீர்கள்
எமக்காக சுமைகளைத் தாங்கி
எம்மைக் காத்து நின்றீர்கள்
இன்று நீங்கள் இல்லாத
வெறுமை
கணமாக வலிக்கிறது.


உங்கள் பாசத்தால் கட்டுண்ட
பிள்ளைகள் நாம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்
உங்கள் ஆசிர்வாதம்
எங்களை
வழிநடத்த வேண்டுகிறோம்

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

C.S/51153)AH-1

## 3ஆம் ஆண்டு நீங்காத நினைவுகள்

மலர்வு 09 . 01 . 1954



உதிர்வு 13 . 07 . 2020

**அமரர் சிவபாதம் தனலட்சுமி**

**திதி : அட்டமி**

அன்பால் எமை ஆண்ட அன்னையே
அன்றொரு நாள் ஒரு வார்த்தை சொல்லாமல்
எமை விட்டுப் பிரிந்து போய்
இன்றோடு மூன்று ஆண்டுகள் ஆனதா...?
இன்னும் ஆறவில்லை எம் துயரம் தாயே...
துன்பம் ஏதும் இல்லாமல் கஷ்டங்கள் எதும்
\- இல்லாமல்
உங்கள் மலர்ந்த முகத்துடன் எங்களை
\- உங்கள்

கண் இமைக்குள் வைத்து நாம் வாழ
வழி அமைத்து கொடுத்தீர்கள் அம்மா!
அன்பைச் சுமந்து அறிவைச் சுமந்து
நல்ல பண்பைச் சுமந்து
நீங்கள் எமக்களித்த இன்பமெல்லாம்
நினைத்து முடிக்குமுன்பே
நிர்மூலமானதென்ன?
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட எம் அன்புத் தாயே

உங்கள் ஆத்மா சாந்தி அடைய தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நீங்காத நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## தனியார் வகுப்புகள் தொடர்பில் போலித்தகவல்கள்



### முடிவுகளில் மாற்றம் இல்லையென யாழ்.மாவட்டச் செயலர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜுலை 10**

**வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் மாவட்டச் செயலரின் சிறப்பு அனுமதியைப்பெற்று தனியார் கல்வி நிலையங்கள் இயங்கவுள்ளன என்று சில பிரதேசங்களில் போலித்தகவல்கள் பரப்பப்பட்டுள்ளன. அந்தத் தகவல்களில் உண்மையில்லை - என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய தனியார் கல்வி நிலையங்கள் வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் மாணவர்களுக்கு போதிய ஓய்வு வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். இந்தத் தீர்மானங்களில் மாற்றமில்லை. அவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையிலான எந்தக் கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், சில பிரதேசங்களில் மாவட்டச் செயலரின் சிறப்பு அனுமதியைப்பெற்று வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் தனியார் கல்வி நிலையங்கள் இயங்கவுள்ளன என்று தகவல்கள் பரப்பப்படுவதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன, அந்தத் தகவல்களில் உண்மையில்லை. எனவே இவ்வாறான போலித் தகவல்களைப் பரப்புவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

(ம-125)

## நிதிக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜுலை 10

யாழ். மாவட்டத்தில் முதியோர் மற்றும் சிறப்புத் தேவையுடையவர்களுக்கான மேமாதக் கொடுப்பனவு அந்தந்த சமுர்த்தி வங்கிகளில் இன்று 10ஆம் திகதி திங்கட்கிழமை விநியோகிக்கப்படவுள்ளது. இதற்கான கொடுப்பனவுகள் பிரதேச செயலகங்களுக்கு பட்டியலுடன் பிரதேச சமூக சேவைகள் அலகுகளால் சமுர்த்தி வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஜுன் மாதத்துக்குரிய கட்டுநிதி இன்னமும் அனுப்பி வைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ய-9)

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 02 . 1944



மறைவு 07 . 07 . 2023

**திருமதி பொன்னுத்துரை மகேஸ்வரி**

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை மகேஸ்வரி கடந்த (07.07.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகநாதி அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவியும், குலசிங்கம் (கனடா), காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் பரமேஸ்வரன் (பால்குடி), சசிகலா, இரெத்தினசிங்கம், மாதினி (ஜேர்மனி), தவமலர் (பிரான்ஸ்) மற்றும் காலஞ்சென்ற சிவநாதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும்,கிருஸ்ணபேபி (கனடா), தர்மகுலசிங்கம் (குலம் - வர்த்தகர் புங்குடுதீவு), அன்னம்மா, கருணாகரன் (பிரான்ஸ்), ஜெயலட்சுமி, இராஜகுமார் (ஜேர்மனி), இராசகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, பரமேஸ்வரி, தம்பிராசா, தர்மலிங்கம் மற்றும் சறோசா, அன்னலட்சுமி, லீலாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான தம்பிஜயா, சோமசுந்தரம், திருநாவுக்கரசு மற்றும் சிவசுப்பிரமணியம், மனோன்மணி, ஜெயலட்சுமி, இராசதுரை, சேனாதிராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், கஜரூபன், ரக்சனா, ஹிசாந் (கனடா), சகிந்தன் (பிரான்ஸ்), நிரோசன், நிசாளினி, நிரோசா, லக்சிகன், நிக்சன், ஜனோசன், தனுசாந், நிலக்சன், சாங்கீதன், நிலானி (ஜேர்மனி), மகிந்தன், தருண், அன்விதா (பிரான்ஸ்), டனுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.07.2023) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7 ஆம் வட்டாரம் ஊரதீவு,
புங்குடுதீவு.
077 923 4884, 077 543 3294

(cs.51184) (N.1)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியின் ஈகிள் கழகத்தின்உரிமையாளரான நாடாளுமன்றமுன்னாள்உறுப்பினர்ஈ.சரவணபவனால்அணி யின் சீருடை அறிமுகப்படுத்தப்பட்டதோடு அணி வீரர்களுடனான கலந்துரையாடலும் இடம்பெற்றது. (ய-125)


# வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தில் பற்றறி திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 10

காரைநகரில் வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகன மொன்றின் 78 ஆயிரம் ரூபா பெறுமதியான மின்கலம் (பற்றறி) கடந்த ஏழாம் திகதி திருடப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

காரைநகர், கருங்காலிப்பகுதியில் வீதித் திருத்தப் பாவனைக்குப் பயன்படுத்தப்படும் தனியாரின் றோலர் வாகனமொன்றை பாது காப்புக் கருதி அந்தப் பகுதியிலுள்ள நண்பரொருவரின் வீடொன்றில் வாகன உரிமையாளர் நிறுத்தி வைத்துள்ளார்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை வாக னத்தை எடுத்துச் செல்லமுற்பட்டபோதே மின்கலம் திருடப்பட் டமை தெரியவந்துள்ளது. (அ-ஓ,125)



சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 11 ஆம் நாளான தேர்த்திருவிழா கடந்த 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ய-66)

# ட்ரோன் பறக்கவிட்ட அமெ.பிரஜை கைது

கொழும்பு, ஜூலை 10



தலதா மாளிகையின் மேலாக ட்ரோன் கமராவை பறக்க விட்ட அமெரிக்க சுற்றுலாவி கைது செய்யப்பட்டு விடுதலை செய யப்பட்டுள்ளார்.

தலதா மாளிகையின் மேலாக ட்ரோன் கமராவை பறக்க விட்ட குற்றச்சாட்டில் அஹமட் என்ற சுற்றுலாவியே தலதா மாளிகை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

தலதா மாளிகை அமைந்துள்ள பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ட்ரோன் கமரா அங்கு பாவிக்கக்கூடாது என்பது தனக்குத் தெரியாது எனக் கூறியுள்ளார். இதனையடுத்து அவரது பதிவுகள் அனைத்தும் அழிக்கப்பட்டு ட்ரோன் மீளவும் ஒப்படைக்கப்பட்டு விடுவிக்கப் பட்டார். (அ-ஓ,6)


## காணவில்லை



வரணி வடக்கு வரணி
யாழ்ப்பாணத்தை சேர்ந்த
**ஆறுமுகம் சிவநாதன் ( நாதன்)**
கடந்த 01/07/2023 அன்று முதல்
காணவில்லை. இவரின் விபரம்
அறிந்தவர்கள் கீழ்காணும்
தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு
கொள்ளவும் **0774709480**
**0774859673,074352258**



## மரண அறிவித்தல்

## மயில்வாகனம் கணேசமூர்த்தி



தொல்புரம் மேற்கு சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கு மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் கணேசமூர்த்தி அவர்கள் நேற்று (09.07.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் முத்துப்பிள்ளை தம்பதிகளின் இளைய புதல்வனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற புனிதவதி அவர்களின் அன்புக் கணவரும், இந்துமதி, வசுமதி, தயாபரன், பகீரதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கீதா, கேமா, கிருஸ்ணகுமார், தவராஜா ஆகியோரின் அன்பு மாமாவும், நிரூஜன், டிலுஜன், சாம்பவன், விக்னேஸ், பவித்ரன், பிரியா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2023) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.30 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை மேற்கு,**
**மீசாலை.** **077 052 0694** **தகவல்: குடும்பத்தினர்.**



## மரண அறிவித்தல்

## சின்னத்துரை கமலசேகரன் (ஈசன்)

**தோற்றம் : 20.11.1969** **மறைவு : 07.07.2023**



சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கமலசேகரன் (பழ வியாபாரி) கடந்த (07.07.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் சின்னத்துரை மற்றும் சின்னத்துரை விஜயலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் , கனகராசா - காலஞ்சென்ற செல்வராணி தம்பதியரின் அன்பு மருமகனும், காந்தனா அவர்களின் அன்புக் கணவரும், சாயிதரன், துயிதரன், மயூரன், விதுசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தமலர் (சுவிஸ்), நந்தகுமார் (அவுஸ்திரேலியா), விஜயகுமாரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வரட்ணம், இளமதி, இராசசிறி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (11.07.2023) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் காலை 8.30 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 10.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று தகனக்கிரியை களுக்காக சம்பில்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 929 5674** **தகவல்: குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சமஷ்டித்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 20ஆம் திகதி உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா செல்லவிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ள பின்னணியில், அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அழுத்தம் பிரயோகிக்குமாறு வலியுறுத்தி ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதமொன்றை அனுப்பி வைக்கவுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வையே இந்தியா வலியுறுத்தவேண்டும் என்ற கோரிக்கையுடன் கூடிய கடிதத்தை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்துக்குப் பொறுப்பான அதிகாரி ராகேஷ் நட்ராஜ் ஊடாக இந்தியப் பிரதமருக்கு அனுப்பிவைக்கவுள்ளது.

இதன் மென்பிரதி கடந்த வியாழக்கிழமை மின்னஞ்சல் ஊடாக துணைத்தூதருக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ,5)

## நீதிபதிகளை...

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தொடர்பில் தெரிவித்த கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே நீதி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (அ-ஓ.5.22)

## தொல்லியல்...

ஜனாதிபதி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு ஜனாதிபதியின் செயலர் சமன் ஏக்கநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரகலய போராட்டத்தின்போது கடந்த ஆண்டு ஜுலை 9ஆம் திகதி ஜனாதிபதி மாளிகை முற்றுகையிடப்பட்டது. அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தப்பியோடியிருந்தார். ஜனாதிபதி மாளிகை மக்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தது. இந்தக் காலப்பகுதியில் ஜனாதிபதி மாளிகையை கையகப்படுத்திக்கொண்டு அதற்குள் தங்கியிருந்தவர்களால், கலைத்துவ மற்றும் தொல்லியல் பெறுமதிமிக்க பல்வேறு பொருள்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில், இலங்கையின் முன்னாள் ஆளுநர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் உத்தியோகபூர்வ சின்னங்கள் பலவும் காணாமல் ஆக்கப்பட்டவற்றுக்குள் அடங்கும். அரசாங்கத்தின் சொத்துக்களை சட்டவிரோதமாக தம்வசம் வைத்துக்கொள்வது தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதால், குறிப்பிட்ட காலத்தின் பின்னர் மேற்படி சின்னம் நபரொருவரிடத்தில் அல்லது நிறுவனமொன்றில் இருக்கும் பட்சத்தில் அதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதியின் செயலர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

மேலும் இது பற்றிய தகவல்களை எவரேனும் அறிந்திருப்பின் 0112354354 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக ஜனாதிபதி அலுவலகத்துக்கு தகவல் வழங்குமாறு கேட்டுகொண்ட ஜனாதிபதியின் செயலர், தேசிய பெறுமதிமிக்க உத்தியோகபூர்வ சின்னத்தை தேடியறிவதற்கு மக்கள் வழங்கும் ஒத்துழைப்புக்கும் பாராட்டு தெரிவித்தார் - என்றுள்ளது. (அ-ஓ.இ)

## முடிந்தால்...

மன்ற உறுப்பினரும் கடற்படையின் முன்னாள் தளபதியுமான சரத் வீரசேகர. நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சரத் வீரசேகர, குருந்தூர் மலையிலிருந்து தன்னை வெளியியேற்றிய முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை கடுமையாகச் சாடும் வகையில் கருத்து வெளியிட்டிருந்தார். இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரன், எம்.ஏ சுமந்திரன், செ.கஜேந்திரன் ஆகியோர் கண்டனங்களை வெளியிட்டிருந்தனர். இது தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் சரத் வீரசேகரவிடம் கேள்வி எழுப்பினார்.

'வடக்கு - கிழக்கில் நடக்கும் உண்மைகளை தெற்கு மக்களின் பிரதிநிதி என்ற வகையில் அம்பலப்படுத்த வேண்டிய பொறுப்பு எனக்கு உண்டு. வடக்கு - கிழக்கு தமிழ்ப் பிரதிநிதிகள் தெற்கிலுள்ள சிங்கள மக்களின் பிரதிநிதிகளை நோக்கி கைநீட்டும்போது நாம் கைகட்டி வேடிக்கை பார்க்க முடியாது. வடக்கு - கிழக்கில் சட்டத்துக்கு அப்பால், நாட்டின் சட்டத்தை மீறித்தான் தமிழ் மக்களில் ஒரு பகுதியினரும் அவர்களது பிரதிநிதிகளும் செயற்படுகின்றனர். அவர்களின் செயற்பாடுகளுக்கு நீதித்துறையும் துணைபோவது கவலையளிக்கின்றது. இந்த நிலையில்தான் குறிப்பிட்ட தமிழ் நீதிபதியின் செயற்பாடுகள் தொடர்பில் அதி உயர் சபையில் நான் உண்மைகளை அம்பலப்படுத்தினேன். நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்திச் சொல்ல வேண்டிய இடத்தில் - சொல்லவேண்டிய நேரத்தில் எனது கருத்துக்களைத் தெரிவித்துள்ளேன். அதற்கு எதிராக தமிழ் மக்களின் பிரதிநிதிகள் கண்டனங்களை வெளியிடுவார்களாக இருந்தால் அதை அதி உயர் சபையில் வெளியிடட்டும். நானும் அதற்குப் பதிலடிகொடுப்பேன். அவர்கள் வெளியில் தெரிவிக்கும் கருத்துக்களை தூக்கி வீசுங்கள்' என்றார் வீரசேகர. (அ-ஓ.5.22)

## சென். பீற்றர்ஸ்...

உயிர்நீத்தவர்களின் உறவுகள், தேவாலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாடுகளில் கலந்துகொண்டதோடு சுடரேற்றி அஞ்சலியும் செலுத்தினர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தின் முன்பாக அமைக்கப்பட்டுள்ள உயிர்நீத்த உறவுகளின் நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்தப்பட்டது. அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் இதில் பங்கேற்றிருந்தார். 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து தேவாலயத்தில் தஞ்சம் புகுந்த அப்பாவி



மக்கள் மீது புக்காரா விமானம் மூலம் சிறிலங்காப் படையினர் தாக்குதல் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ.125)

## பேருந்து...

உயிரிழந்துள்ளதுடன் மேலும் பலர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். 10 பேர் உயிரிழந்ததாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. 23 பேர் காயமடைந்துள்ளனர். பாதுகாப்பற்ற பாலத்தில் பயணித்துக்கொண்டிருந்தபோதே, பேருந்து கவிழ்ந்தது. பேருந்தில் இருந்தவர்களை மீட்கும் பணியில் பிரதேசவாசிகள் ஈடுபட்டுள்ளனர். காயமடைந்தவர்கள் தற்போது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ஓ.இ)



## ரிக்ரொக்...

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ரிக்ரொக் ஊடாக சீதுவையைச் சேர்ந்த தமிழ் இளைஞன் ஒருவருடன் குறித்த பெண்ணுக்கு தொடர்பு ஏற்பட்டுள்ளது. நாளடைவில் காதலாகியுள்ளது. இதனையடுத்து கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இருவரும் பதிவுத் திருமணம் செய்துள்ளனர்.

பதிவுத் திருமணமான சில வாரங்களிலேயே இளம்பெண்ணை பணத்துக்காக பாலியல் தொழிலில் ஈடுபடுமாறு இளைஞன் வற்புறுத்தியதாகவும் இதனையடுத்து அவர் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தனது வீட்டுக்கே திரும்பி வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அதன் பின்னரும் சீதுவையைச் சேர்ந்த இளைஞன், இளம்பெண்ணை மிரட்டி வந்துள்ளார் எனவும் அதனையடுத்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதன் பின்னரும் இளைஞன், இளம் பெண்ணுக்கு தொல்லை கொடுத்து வந்த நிலையில் மன அழுத்தத்தால் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளதாக விசாரணையின்போது உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஓ.125)

## முரளிதரன்...

செயலராகப் பணியாற்றிய க.சிறிமோகனன் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார். இவர்கள் இருவரும் புதிய நிலையங்களில் இன்று திங்கட்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர்.

சங்கானை பிரதேச செயலராகப் பணியாற்றிய திருமதி பிறேமினி பொன்னம்பலம் கிழக்கு மாகாணசபைக்கும், கிழக்கு மாகாண சபையில் பணியாற்றிய திருமதி கவிதா உதயகுமார் சங்கானை பிரதேச செயலகத்துக்கும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை - வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலராக நியமிக்கப்பட்ட ம.பற்றிக் டிறஞ்சன் இன்று மதியம் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். (அ-ஓ.5)

## அதிபர்...

உப தலைவர் ஆ.தீபன் திலீசன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

பாடசாலை அதிபர் வெற்றிடம் தொடர்பாக கடந்த ஏப்ரல் மாதம் பத்திரிகை வாயிலாக விண்ணப்பம் கோரப்பட்டு, மே மாதம் நேர்முகத்தேர்வும் நடத்தப்பட்டிருந்தது. நேர்முகத் தேர்வில் தரம் - I அதிபர் சேவையைச் சேர்ந்த தகுதியான ஒருவர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

அவருக்கு நியமனம் வழங்கப்படவிருந்த நிலையில், பத்திரிகையில் கடந்த 7ஆம் திகதி மீண்டும் வேலணை மத்திய கல்லூரிக்கான அதிபர் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளமையானது, வடமாகாணக் கல்வியமைச்சின் முறையற்ற செயற்பாடாகும்.

தமக்கு வேண்டியவர்களின் தேவைகளுக்காக, வடமாகாணக் கல்வியின் தரநலன்களைத் தூக்கியெறிந்து, வடமாகாணக் கல்விப்புலத்தில் நம்பிக்கையற்ற தன்மைகளை உருவாக்கும், வடமாகாணக் கல்வியமைச்சின் செயற்பாடுகள் வன்மையான கண்டனத்துக்குரியன.


தாம் சார்ந்தோரின் தனிப்பட்ட நலன்களுக்காக, பத்திரிகை மூலம் மீண்டும் பிரசுரிக்கப்பட்ட வேலணை மத்திய கல்லூரி அதிபருக்கான விண்ணப்பம் கோரல் நிறுத்தப்பட்டு, ஏற்கனவே நடைபெற்றிருந்த நியாயமான நேர்முகத்தேர்வின் முடிவின் பிரகாரம் அதிபர் நியமிக்கப்பட வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்துகிறது - என்றுள்ளது. (அ-ஓ.இ)

## மழைக்கு...

முன்னர் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. மேற்காவுகைச் செயற்பாட்டின் காரணமாக உருவாகும் மழை என்பதனால் இடிமின்னலுடன் இணைந்ததாகவே கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார். (அ-ஓ,5)

## வாகனத்தை...

என்பவர் தாடியால் இழுத்து நேற்றுச் சாதனை நிகழ்த்தியுள்ளார். 400 மீற்றர் தூரத்தை 7 நிமிடம் 48 செக்கனில் இழுத்து இந்தச் சாதனை படைத்துள்ளார். மட்டுவில் ஐங்கரன் சனசமூக நிலைய முன்றலில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (அ-ஓ,27)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளியீடும் கருத்தாடலும்

மட்டக்களப்பு, ஜூலை 10

சந்திரோதயம் கலை இலக்கிய பெருமன்றம், கலை இலக்கிய வட்டம் இணைந்து நடத்தும் எழுத்தாளர் என்.செல்வராஜா எழுதிய 'மட்டக்களப்பில் பொலிவுபெறும் பொதுசன நூலகம்' என்னும் நூல் அறிமுகமும் கருத்தாடலும் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் ச.மணிசேகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், நூல் அறிமுக உரையை கவிஞர் த.உருத்திராவும், நூல் நயவுரைகளை விரிவுரையாளர் க.மோகனதாசன், இலங்கை நூலகர் சங்கத் துணைத் தலைவர் செ.சாந்தரூபன், ஏற்புரையை நூலின் ஆசிரியர் என்.செல்வராஜாவும் ஆற்றவுள்ளனர். நூலின் முதற் பிரதியை மூத்த எழுத்தாளர் கவிஞர் செ.குணரெத்தினம் பெற்றுக்கொள்ளவுள்ளார். (ய)

# மருந்துகளின் தரமின்மைக்கு சட்ட ஓட்டையே காரணம்!

## பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 10

இலங்கையில் மருந்துகளின் தரம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைக்கு மருந்து ஒழுங்கு முறை அதிகாரசபைச் சட்டத்தில் உள்ள குறை பாடுகளே காரணம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்தக் குறைபாடுகளைத் திருத்தவேண்டும். இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டவரைவு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அரசாங்கம் அதை நிறைவேற்றவில்லை - என்றார். (எ-இ)


## A / L பௌதிகவியல்

**A / L - 2025**
ஆரம்பம் - 12.07.2023 புதன் 4.30 p.m - 5.30 p.m
(திங், புதன், வெள்ளி - 4.30 p.m - 5.30 p.m

**A / L - 2024**
அலைகளும் அதிர்வுகளும்
ஆரம்பம் - 12.07.2023 புதன் 5.30 p.m - 7.00 p.m
(திங், புதன், வெள்ளி - 5.30 p.m - 7.00 p.m

**A / L - 2023**
வினா விடை வகுப்பு
ஆரம்பம் - 12.07.2023 புதன் 3.00 p.m - 4.30 p.m
(திங், புதன், வெள்ளி - 3.00 p.m - 4.30 p.m

ஆசிரியர்: திரு.M.ஸ்பெல்மன் (BSc, PGFD
இடம்: GOLDEN PEARL
நல்லூர் (யாழ். மாநகர சபைக்கு முன்பாக)
ஆசிரியர்: 077 611 6724
நிர்வாகம்: 077 703 1125

## வீடும் காணியும் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அருகில் கல்லூரி ஒழுங்கையில் 3 பரப்பும் 11 குளியும் உள்ள காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. (CS 51181)(k-1)

தொடர்பு: 077 558 9110
வட்ஸ்அப்: + 447802425456

## மேல் மாடி வீடு விற்பனைக்கு

✓யாழ். மானிப்பாயில் 2 பரப்பில் அமைந்த லக்சறி வீடு (மேல்மாடி) சகல தளபாட வசதிகளுடன் விற்பனைக்குண்டு.
✓4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

077 102 2763

## தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் வீடு அல்லது காணி விலைக்குத் தேவை தரகர் தேவையில்லை (CS 51180)(k-1)

தொடர்புக்கு: 076 790 9387

## CANADA VISA

1) Minor Education - (Age Limit - 7 to 17 years) தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2) Visitor Visa- கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
3) Student Visa - IELTS 6.00 உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் (Sep 2023 and Jan 2024)
4) Work and Study Program - Course Fee after Visa
மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
Contact: Visa Consultant, 136 Adiyapatham Road, Thirunelvely, Jaffna
T.P: 077 038 5584

## DHL துரித பொதிகள் சேவை

சகல நாடுகளுக்கும் கடிதங்கள், பொதிகள்
3-5 வேலைநாட்களில் ஒப்படைக்கப்படும்
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna.
T.P: 0777 55 45 28

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 15பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* சுன்னாகம் சாவகச்சேரி செல்லும் அரச, தனியார் பேருந்துகள் பயணிக்கும் பிரதான வீதி.
* 1 பரப்பு ஒரு லட்சத்தி ஐம்பதுஆயிரம் மட்டும்.
பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.

தொடர்பு: 076 8260 354, 076 0570 354


## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி பேரம்பலம்

யாழ். நெடுந்தீவு மேற்கு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பாண்டியன் குளத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பேரம்பலம் அவர்கள் 08-07-2023 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி இராமாசிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனும், நாகநாதி அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், புவனேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும் பிரபாகரன் (பிரித்தானியா), சாந்தினிதேவி (பிரித்தானியா), யசோதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மற்றும் சிவகுமாரி (பிரித்தானியா), லோகேஸ்வரன்(பிரித்தானியா), விக்னேஸ்வரன்(அதிபர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரஷா, பிரமிஷா, கவின், நவின், அட்சயன், அக்ஷயா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான பராசக்தி, ஜானகி ,கனகம்மா பேரின்பம்(கிராமசேவையாளர்) மற்றும் இலட்சுமி, கமலம், இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் நாளை (11-07-2023) செவ்வாய்க்கிழமை மு.ப 09:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பாலியாறு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

+44 7534 5882 92
+44 7456 7818 20, +94 77 6759 184

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
07 - 08 - 1950



மறைவு
08 - 07 - 2023

### திரு. ஏகாம்பரம் ஜெயக்குமார்

(City Tex, JPY Fashion Club உரிமையாளர்)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ஏகாம்பரம் ஜெயக்குமார் அவர்கள் நேற்றுமுன்தினம் (08.07.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஏகாம்பரம் - கருணாகடாட்சி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற செல்வரத்தினம் - சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும், யசோதராவின் அன்புக் கணவரும் சிவசைலஜா, புவிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜனராஜ், தக்ஷனி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிப்பிரவீன் அவர் களின் பாசமிகு பேரனும் செந்தில்தேவி, வாகீசன், ரவீந்திரன், ரகுவர்ணன ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பரமேஸ்வரன், பகீரதன், பகீரதி, சியாமளா, மோகன்குமார் காலஞ்சென்ற நகுலேஸ், பவானியம்பாள், ஜரா, ரத்னேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (10.07.2023) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகன் : 077 293 5537
மனைவி : 076 905 2364
021 222 1445
மகள் : + 61406478472

(CS 51183)(K-1)

தகவல்:
குடும்பத்தினர்
465/16 பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மெயில் : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.